<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>

நாள்: 18.03.2026, அ.வ.எண். 389/2020, வா.சா.1. ஜெயசீலன், த/பெ. ஆறுமுகம்

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>**

16) அதே ஜெயபிரகாஷ் வீதியில் ஒரு முருகேசன் மற்றும் அவரது மனைவி வள்ளிநாயகம் என்பவருக்கு அருணாச்சல கவுண்டர் ஒரு கிரயம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. மேற்படி விவரம் எனக்கு தெரியும் என்றும் வழக்கிற்காக தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் 1 முதல் 3 பிரதிவாதிகளின் தாயார் வள்ளிநாயகம் செல்லமுத்து கவுண்டரின் மனைவி என்றும் அதை திசை திருப்புவதற்காக பல்வேறு பெயர்களை சொல்லி தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

17) மேற்படி செல்லமுத்து கவுண்டரின் மனைவி வள்ளிநாயகம் , 1 முதல் 3 பிரதிவாதிகள் செல்லமுத்து கவுண்டரின் வாரிசுகள் என்று அ.வ.எண். 785/2008 வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அதில் ஒரு பொது அறிவிப்பு 28.04.2009 ல் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது பிரமாண பத்திரிக்கையில் 6 வது பத்தியில் உட்பிரிவு 7 ல் உடுமலை பேட்டை சார்பு நீதிமன்ற தீர்ப்பாணை வா சா ஆ 8 ன் அ.வ.எண்.96/1975 வழக்கில் செல்லமுத்து கவுண்டருக்கு குழந்தைகள் யாரும் கிடையாது என்று சொல்லியிருக்கும் பட்சத்தில் அந்த வழக்கில் யார் யார் தரப்பினர்கள் என்று நான் எனது தாவாவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

18) மேற்படி அ.வ.எண்.96/1975 வழக்கில் வள்ளிநாயகம் ஒரு தரப்பினராக இருந்தாரா என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதே போல் நான்

ஒப்பம்/-(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

செல்லமுத்துகவுண்டரின் மனைவிகள் மயிலாத்தாள் , பாக்கியலட்சுமி என்றும் சொல்பவர்களை மேற்படி வழக்கில் தரப்பினர்களா என்று நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கிற்கும் வள்ளிநாயகத்திற்கும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லாததால்தான் வழக்கை திசை திருப்ப வேண்டி பொய்யான காரணங்கதை கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

19) மேற்படி உடுமலைபேட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வள்ளிநாயகமும் 1 முதல் 3 பிரதிவாதிகளும் செல்லமுத்து கவுண்டருக்கு எதிராக ஜீவனாம்ச வழக்கு தாக்கல் செய்து வள்ளிநாயகத்திடமிருந்து நஷ்ட ஈடு பெற்றுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாமல் எனது பிரமாண வாக்குமூலத்திலும், பிராதிலும் 1 முதல் 3 பிரதிவாதிகள் செல்லமுத்து கவுண்டருக்கு வாரிசுகள் இல்லை என சொல்வதற்கு எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

20) சின்னம்மாள் என்பவர் மனோன்மணியம்மாளுக்கு உயில் எழுதிவைத்த விவரம் எனக்கு தெரியும் என்றால் ஞாபகமில்லை. மேற்படி விவரங்கள் எனக்கு தெரியும் என்றும் அதை மறைப்பதற்காக எனது முதல் விசாரணை சாட்சியத்திலும் குறுக்கு விசாரணை சாட்சியத்திலும் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி பிரதிவாதிகளின் குடும்ப சொத்து குறித்து எனக்கு எதுவும் தெரியாமல் அவர்களுக்கு சொத்துக்களில் உரிமையில்லை என்று கூறுவதற்கு எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

21) எனது பிரமாண பத்திரிக்கையில் பத்தி 8 ல் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் குறித்து கேள்வி கேட்க எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. எனது

ஒப்பம்/–(R. சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி

பிரமாண பத்திரிக்கையில் பத்தி 8 ல் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் குறித்து ஏற்கனவே வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தீர்ப்பு செய்யப்பட்டுள்ள நிலையில் மீண்டும் அதே சங்கதிகள் குறித்து கேள்வி எழுப்ப தடை செய்யப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அதே போல அ.வ.எண்.360/2012 ல் சம்மந்தமாக கேள்வி கேட்க எனக்கு உரிமையில்லை எனவும் ஏற்கனவே வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தீர்ப்பு செய்யப்பட்டுள்ள நிலையில் மீண்டும் அதே சங்கதிகள் குறித்து கேள்வி எழுப்ப தடை செய்யப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

22) எனது பிரமாண பத்திரிக்கையில் பத்தி 10 ல் குறிப்பிட்டுள்ள விவரங்கள் சம்மந்தமாக நான் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகள் குடும்ப சொத்தை பொறுத்து ஏற்படுத்திக்கொண்ட ஆவணங்களை மோசடி என்று சொல்வதற்கு எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. எனது பிரமாண பத்திரிக்கையில் பத்தி 11 ல் குறிப்பிட்டுள்ள தாவா சொத்திற்கு நான் உரிமையாளர் என்பதை காண்பிக்க எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன்.

23) எனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களுக்கும் தாவா சொத்துகளுக்கும் வெவ்வேறானவை என்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளின் சொத்துக்களை சட்டத்திற்கு புறம்பாக பெறவேண்டும் என்ற நோக்கில் பொய்யான சங்கதிகளை கொண்டு தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா சா ஆ 10 ஆவணத்தில் உள்ளீட்டு என்ற இடத்தில் எந்த மதிப்பும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதே ஆவணத்தில் இடம் விடல் என்ற இடத்தில் 16 வது எண்ணாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே ஆவணத்தில் வரி பிளப்பு செய்யப்பட்ட வாக்கியம் என்னால் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல.

ஒப்பம்/-(R. சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி

24) மோசடியாக ஆவணங்கள் தயார் செய்ததாக என் மீதும் என் பிள்ளைகள் மீதும் கோட்டூர் காவல் நிலையத்தில் குற்ற எண்.477/2017 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. மேற்படி விவரம் எனக்கு தெரியும் என்றும் மேற்படி குற்ற எண்ணில் நானும் எனது மகனும் பிணையில் வந்துள்ளோம் என்றால் சரியல்ல அது போன்று ஒரு வழக்கே இல்லை.

25) 1 ம் பிரதிவாதியின் வீட்டினுள் நானும் எனது மகனும் நுழைந்து 1 ம் பிரதிவாதியின் மகளின் கையை அறுத்ததாகவும் வீட்டை இடித்ததாகவும் என் மீதும் என் மகன்கள் மீதும் கோட்டூர் காவல் நிலையத்தில் குற்ற எண்.62/2026 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி 2 குற்ற வழக்குகளும் 1 முதல் 3 பிரதிவாதிகளை அவர்களது சொத்திலிருந்து வெளியேற்றுவதற்காக என்னால் ஏற்படுத்தப்பட்ட முயற்சிகளால் போடப்பட்ட வழக்குகள் என்றால் சரியல்ல. மேற்படி சொத்துகள் என்னுடைய சுவாதீனத்தில் உள்ளது. தாவா சொத்துக்கள் என்னுடைய சுவாதீனத்தில் உள்ளது என்பதை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

26) என்னிடம் காட்டப்படும் அறிவிப்பு 1 ம் பிரதிவாதிக்கு கோட்டூர் உதவி மின் பொறியாளர் அனுப்பிய அறிவிப்பு என்றால் சரிதான். **மேற்படி அறிவிப்பு பி வா சா ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி அறிவிப்பில் மின்இணைப்பு எண். 3260041087 துண்டிப்பதற்காக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி மின்இணைப்பு எண். 1 ம் பிரதிவாதியின் பெயரில் உள்ளது என்றால் எனக்கு

ஒப்பம்/–(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

தெரியாது. தாவா சொத்துக்கள் 1 முதல் 3 பிரதிவாதிகளின் சுவாதீனத்தில் தான் உள்ளது என்பது மேற்படி பி வா சா ஆ 3 லிருந்தே தெரியவருகிறது என்றால் என்னுடைய சுவாதீனத்தில் தான் இருந்து வருகிறது. நான் தான் மின் கட்டணம் செலுத்தி வருகிறேன். அதற்கான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

27) வா சா ஆ 13 மற்றும் 14 ஆவணங்கள் சென்னை உயர் நீதிமன்றத்தால் Set aside செய்யப்பட்டுவிட்டது என்றும் அதை மறைத்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து குறித்து ஏற்கனவே சார்பு நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு அவைகள் எனக்கு எதிராக தீர்ப்பு பிறப்பிக்கப்பட்ட நிலையில் மீண்டும் அதே சொத்து குறித்து இந்த வழக்கு தாக்கல் செய்திருப்பது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல.

28) தாவா சொத்துக்களை அளப்பதற்கு நான் தயாராக உள்ளேனா என்றால் சரிதான். எனது ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்துக்களை அளக்க எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். உரிமை குறித்து கேள்வி உள்ள நிலையில் நிரந்தரஉறுத்துக்கட்டளைபரிகாரம் மட்டும் கேட்டு தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வா சா ஆ 14 உத்தரவிற்கு பின்னிட்டு 2022 ம் ஆண்டு மீண்டும் சொத்துக்கள் அளக்கப்பட்டு புகைப்படம் மற்றும் வீடியோக்கள் எடுக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

ஒப்பம்/−(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

29) வழக்கிற்கு எவ்வித வழக்குமூலமும் கிடையாது என்றும் அதனால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/–(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி